ஜே ஹிந்த்—3.

இ. தே. ரா. சிருஷ்டிகர்த்தா பேசுகிறார்!

ஆரம்பித்தது எப்படி?

ஜெனரல் மோஹன்ஸிங்

ஜே ஹிந்த்
2-53, ஆண்டர்ஸன் தெரு,
மதராஸ் 1.

22,194 INA
N47
172207

தமிழ் ஒலிபரப்பு: கி. ஸ்ரீ. வே.

3 அணா.

Do you want?

Cuticura
yardley
&
other Toilet
Requisites



PARKER
SHEAFFER etc.
&
High Class
Stationeries

visit

Lindner & Company

(Dept. J. M. 3)

Anderson Street,
MADRAS.

15 MAY 1947

இ. தே. ரா. என்று பிரசித்தி பெற்றுவிட்ட இந்திய தேசிய ராணுவத்தின் சிருஷ்டிகர்த்தா ஜெனரல் மோஹன் ஸிங் பேசுகிறார்!

நண்பர்களே, நாட்டுமக்களே,

இன்று டிஸம்பர் 8வ. இதே டிஸம்பர் 8வ யில் தான் ஐந்து வருஷங்களுக்கு முன்பு, ஜப்பானியர்களால் பெரிதும் பறைசாற்றப்பட்ட மகத்தான தூரக்கிழக்கு ஆசிய யுத்தம் ஆரம்பமாயிற்று என்பது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். அச்சமயம் ஸயாம் எல்லைப் புறத்திலிருந்த 11 வது இந்திய ராணுவம் தற்காப்புப் போரி லீடுபட்டிருந்தது. இச் சைன்யத்தில் எனது வசமிருந்த 11\14 வது பஞ்சாபிப் படையோ இப்போரில் பிரதமபாகம் வகித்தது. எனது படைக்கு ஒப்புவிக்கப் பட்டிருந்த வேலை என்னவெனில் எங்கள் சைன்யத்தின் நிலைக்களத்தி லிருந்து சுமார் 15 மைலுக்கப்பால் நாங்கள் தங்கி நின்று எதிரியை தடுத்து நிறுத்தி அதன்மூலம் எங்கள் மூலபலத்திற்கு பின்னேற சற்று அவகாசம் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டி யிருந்ததேயாம்! அங்கு நாங்கள் எதிரியை எதிர்த்து நின்று கடைசி ஆள்வரை போரிடவேண்டும் என்பதே எங்களுக் கிடப்பட்டிருந்த கட்டளை.

நாங்கள் 8வ யிரவு முதன்முறையாக எதிரியை (ஜப்பானை) சந்தித்தோம். கடும்போர் 11வ மாலை வரையில் நடந்தது. முடிவில் எதிரியின் டாங்கிகள் எங்களை வெற்றி கொண்டன. எங்களிடம் போதுமான ஆயுத பல மில்லாததால் இத்தோல்வி ஏற்படவே எங்கள் சைன்யம் பலமாகச் சிதறுண்டுபோய் பலதிசைகளிலும் பின்வாங்க முற்பட்டது.

172271

மகத்தான அந்த 11வ்து இரவுதான் என் உள்ளத்திலிருந்து ஒரு சிந்தனைப் பொறி கிளம்பியது. தூங்கிக் கிடந்த எனது தேசாபிமானம் விழித்தெழுந்து வெஞ்சுடர் விட்டெரிய லாயிற்று. வாழ்விற்கும் சாவிற்கும் இடையே யிருந்த நுண்ணிய எல்லையை நான் அன்றே கண்டேன். அநேகம் முறைகள் ஜாப் தாக்குதலுக் குள்ளானதும் தவிர தனிப்பட இருபதே கஜதூரத்தி லிருந்து தாக்கிய ஜாப் டாங்கிகளிடமிருந்து தப்பிப் பிழைத்தேன். அந்த மசான வெளியில் தன்னந்தனியாய் மொட்டையாக நின்ற ஒரு ரப்பர் மரத்தின் மறைவே எனக்குத் துணையாயிருந்து எனது சகாக்கள் யாவரும் விட்டில்ய் பூச்சிகள்போல் விழுந்து கொண்டிருக்க என்னைக்காத்து உயிரளித்தது. இந்த ரணகளக்காட்சி என் அந்தராத்மாவைத் தொட்டு உலுக்கியது. நான் நிலை கொள்ளாதவனானேன். ஆயிரமாயிரம் கேள்விகள் புற்றீசல்கள்போல என்உள்ளத்தில் கிளம்பின அவை...

இவ் இந்தியர்கள் எதற்காகப் போரிட்டுக் கொண்டிருக்கிறார்கள்? எந்த உன்னத லட்சியத்திற்காக கணக்கற்ற இவ் விளைஞர்களின் உயிர்கள் பலியிடப் படுகின்றன? இந்த ஒவ்வொரு இந்தியசோல்ஜரும் தனது ஆங்கில ஆண்டைக்காகவா தெருநாய்போலச் செத்து விழுவது? வேறு லட்சியமே அவனுக்கு தேவையில்லையா? இன்னொரு கொடுங்கோலனுடைய சுதந்திரத்திற்காக தன் உயிரைக் கொடுக்க தீரமாக அவன் முன்வர முடியுமென்றால், அவன் தன்னுடைய சுதந்திரத்திற்காகவே தீரமாகப் போரிட முடியாதா? அதற்கு அவன் ஏன் முயற்சிக்கக் கூடாது? பார்க்கப் போனால் உண்மையில் சுதந்திரத்தின் விரோதி யார்? அது ஜப்பான் அல்ல!—பிரிட்டனே! பிரிட்டன்தான் சுதந்திரத்தின் நிஜ விரோதி! உலக சமாதானத்துக்கே விரோதி!

சிந்தனை இப்பாதையை எட்டியதும் பிரிட்டனுக்காக நம் இளஞ்சிங்கங்களை எதிரியின் பீரங்கிகளுக் கிரையாக

உபயோகித்துக் கொள்ளும் பிரிட்டனுக்காக நாம் போரிட வேண்டிய அவசியமில்லை என்ற முடிவுக்கு வந்தேன். அதோடு இந்திய சைன்யம் பிரிட்டனுக்குப் பணிவாக இருந்து வரும் வரையில் அவர்கள் நமக்கு சுதந்திர மளிக்க முன்வர மாட்டார்களென்பதும் எனக்கு தெளிவாக விளங்கியது. இக் கொந்தளிப்பும் குமுறலும் சந்தேகங்களும், தீர்மான எதிரொலிகளும் ஒருவாறு அடங்கியதும் என்மனம் நிர்மலமாகியது—பின், புது ஒளி ஒன்று பிறந்தது. நான் இனி கைப் பற்ற வேண்டிய புதுவழி எனக்கு தெளிவாகத் தென்பட்டது. அது தான் என்ன?

பிரிட்டிஷாருக்காக போரிடுவது நியாயமில்லை என்றால், நான் ஏன் ஜப்பானியரை நாடி இந்தியா பற்றிய அவர்களது உண்மைக் கொள்கைகளை யறிந்து கொள்ளக்கூடாது? அவர்கள் உண்மையிலேயே நமது நன்மையை நாடுபவர்களாயிருந்தால் அவர்களுடைய உதவியைப் பெற்று நமது உண்மை விரோதி பிரிட்டனை நாம் ஏன் எதிர்க்கக் கூடாது?— இதுவே என் மனதில் தோன்றிய புது ஒளி...

நமது சைன்யமானது ஒப்பற்ற வீரர்கள் கொண்டது— துணிவிலும், தியாகத்திலும், தீரத்திலும், சோர்வடையாது போரிடுவதிலும், சலியாத உழைப்பிலும் இவர்களுக்கிணை வேறுயாரும் இவ்வுலகில் இல்லை. இவர்களை மிஞ்சுபவர்களும் கிடையாது. ஆனால் இவ்வற்புதமான சைன்யத்தை பிரிட்டன் தனது கொடுங்கோன்மையால் அடிமைப்படுத்திக் கொண்டுவிட்டது. தேசாபிமானம் கொள்வதே மாபெருங் குற்றமாகும் என்ற மனப்பான்மை புகுந்துள்ள சைன்யம் இவ்வுலகில் இது ஒன்றே. இதன் உதவியால்தான் இவ் வன்னியர் உலக ஜனத்தொகையில் நாலில் ஒருபங்குள்ள நம்மை கொடுங்கோலாட்சிக் குள்ளாக்கிக் கொண்டுள்ளது. இந் நிலைமை அதிசயிக்கத் தகுந்தது; தூமகேது போன்ற தூர்க்குறி யுள்ளது.

இக் காரணம் பற்றியே அநேகர் நம் இந்திய சேனையை வெறும் கூலிப்பட்டாளம் என்று கேலி செய்கின்றனர். இதை நான் ஒப்புக் கொள்ளவில்லை. கூலிப்பட்டாளம் என்பது வேணுமானபோது வாடகைக் கமர்த்தப்பட்டு காரியம் முடிந்ததும் ஆன கூலிகொடுக்கப்பட்டு வெளியே அனுப்பப்படும் பட்டாளமாகும். ஆனால் நம் இந்திய சேனையின் நிலை இதற்கு மாறானது. அதற்கு உடை, உணவு, உறங்க இடம் யாவும் கொடுக்கப்பட்டு பிரிட்டிஷாருக் குதவியாக போர்புரிவதுடன் மட்டுமில்லாமல், அனேகந் தடவைகள் தம் சோதரர்களான இந்தியர்கள் மீதே கொலைத் தொழில் புரிந்து அவர்களது லக்ஷியத்தை தகர்க்கவும் உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது. இச் சேனைக்கு, தான் பெற்ற கூலிக்குப் பிணையாக விடுதலையே கிடையாது. இப்பேர்பட்ட அதிசயமான சைன்யத்தை கூலிப் பட்டாளம் என்று சொல்வது பொருந்தலே பொருந்தாது, பொருந்தாது, முக்காலும் பொருந்தாது. அப்படியானால் இதை என்னவென்று அழைப்பதென எனக்குப் புரியவில்லை!

பேர் புரியாவிட்டாலும் ஆங்கிலேயர்களது இவ்வதி பயங்கர ஆயுதத்தை ஒரு வலுவான தேசாபிமானமுள்ள சைன்யமாக மாற்றி இதை தாய்நாட்டு நலனுக்காகப் போரிடச் செய்யவேண்டுமென நிச்சயித்தேன் அன்னியர்களாகிய பிரிட்டிஷார் எந்த ஆயுதத்தின் உதவியைக் கொண்டு தம் ஏகாதிபத்யத்தை இந்நாட்டில் வேர்கொள்ளச் செய்திருக்கிறார்களோ, அவ்வாயுதத்தைக் கொண்டே அவர்களது ஏகாதிபத்ய ஆட்சியை வேறரக் களையவேண்டுமென்று சபதம் செய்தேன்.

சாதாரண நாட்களா யிருந்திருந்தால் எனது இந்த சங்கற்பம் நிறைவேறுவது மிகவும் கஷ்டமாகி யிருக்கும். ஆனால் மலேயாவில் நாங்கள் போரிட்டுக் கொண்டிருந்த அந்த அபாயகரமான சூழ் நிலையில், இவ்விலக்ஷியம் படிப்படியாக

நிறைவேற வழியுண்டு எனக் கண்டேன்—வெற்றியைப்பற்றி சந்தேகமேயில்லை. சைன்யத்தின் தளகர்த்தர்களுக்கு நான் அவர்களது உழைப்புக்கு, தீரத்துக்கு, சண்டையில் புகழேது மில்லை யெனவும், உண்மையில் அவர்கள் வெறும் சோளக் கொல்லை பொம்மைகள் மாதிரி அலங்கரிக்கப்பட்ட அடிமை கள்தான் எனவும் தீவிரமாக அறிவுறுத்த வேண்டும். இவ் வெண்ணம் அவர்கள் மனதில் உதித்த மறுக்ஷணமே நமது சுதந்திரப் போராட்டம் முழுவெற்றி கொண்டதாகிவிடும் எனக் கண்டேன்.

ஆழ்ந்த யோசனைகளி லீடுபட்டவனாக எனது பாசறைக் குத்திரும்பி வருகையில் உயரே ஏதோ சப்தம்கேட்க நிமிர்ந்து பார்த்தேன். ஜாப் விமானங்கள் சில, பறந்துகொண் டிருக்கை யிலேயே துண்டு ப்ரசுரங்களை வாரியிறைத்தவண்ணம் சென் றன. அத் துண்டுப் பிரசுரங்களுள் ஒன்றை கண்டெடுத் துப் பார்த்தேன். என்னவிருந்ததென்று நினைக்கிறீர்கள்? ஆமாம், நீங்கள் எதிர்பார்த்தபடியே "ஆசியா ஆசியாக்காரர் களுக்கே! வெள்ளைப் பிசாசுகளை தூரக் கிழுக்கி லிருந்து விரட்டியடி!—நாங்கள் மேற்கத்திய அடிமைத்தளைகளி லிருந்து ஆசிய மக்களை விடுவிக்கவே வந்துள்ளோம்! எந்த ஆசியாக்காரனும் எங்கள் விரோதியல்ல." என்பது போன்ற பின்னும் பல ஸ்லோகங்கள் பொறிக்கப்பட் டிருந்தன. இவற்றைப் படித்ததும் எனக்கு புதுவழி, சுலபமானவழி யொனறு தோன்றியது. எனது திட்டத்துடன் ஜப்பானி யர்களை அணுகினால் நிச்சயமாக அவர்கள் அதற்கிசைந்து பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்திற் கெதிராகப் போரிட ஒரு சுதந்திர சைன்யத்தை சிருஷ்டிக்க உதவியளிப்பார்கள் என உறுதியாக நம்பினேன்.

இதனிடையே எனது அந்தராத்மா "இதுவே தக்க சமயம் உனது சகலத்தையும் பணயமாக வைத்து செயலி லிறங்கு! பல நூற்றுண்டுகளாக நிலவிவரும் இந்திய சைன்

யத்தின் அடிமைக்கொள்கையை தகர்த்தெறி! இன்றே புதிய லக்ஷியமொன்றை அவர்களுக்கு வகுத்துக்கொடு. மனித ஜாதியில் நாலி லொருபங்கை வெறும் பலாத்காரத்தினுல் அடக்கி யாண்டுவரும் பிரிட்டானியா தேவதை டாங்கிகளின் வெடிகுண்டுகளின் பாஷையன்றி வேறு எவ்விதமான நய வார்த்தைகளும் புரிந்து கொள்ளச் சக்தியில்லை. ஆகவே தான் இந்தியசைன்யத்தில் மகத்தானபுரட்சியை உண்டாக்குவ தற்கான பொன்னுன சந்தர்ப்பம் இதுவே! நீ சாதாரண காப்டன் தானே என்று தயங்காதே! உனது லக்ஷியமே உனது ஊன்றுகோல்; குறிக்கோளும் அதுவே! செயலில் உடனே இறங்கினுல் நிச்சயம் வெற்றி உனக்குக் கிட்டும்!" என்று உறுத்தி உறுத்திச் சொல்ல வாரம்பித்தது.

பெரிய சிந்தனைப் போர்க்களமாகிவிட்ட எனது மனத் துடன்போராடிக்கொண்டே இருண்டகாடுகளினூடே போய்க் கொண் டிருக்கையில் நான் காப்டன் மஹம்மத் அக்ராமை ச் சந்தித்தேன். அவர் என் தளத்தைச் சேர்ந்தவர் அவ ருடன் இரு பட்டாணியர்க ளிருந்தனர் அவரிடம் எனது திட்டத்தைத் திறந்து சொல்லி விவரித்தேன். அதைகேட்ட அவர் தீர்க்கமாக ஆலோசித்த பின்னர் அதை ஏற்றுக் கொண்டதுடன் எதுவரினும்சரி, என்னுடன் தோளோடு தோள் நின்று லக்ஷ்யத்திற் குதவுவதாக வாக்களித்தார்.

வீர அக்ராம்! இடியேறு அனைய வீரமும் ஞானியின் அறிவும் இணைந்தவர் அவர். அவரைப் போன்ற உண்மைச் சகாவை, தீவிர உழைப்பாளியை நான் இதுவரை வேறு எங்கணும் கண்டதுமில்லைக் கேட்டதுமில்லை. இஸ்லாமிய மதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை வழுவாதுகடைபிடித்த வர். அவர் தினமும் தமது நேமநிஷ்டைகளைத் தவருதவர். அவரது பெயர் நமது தேசத்தவர்க்குப் புதிதாக இருக்கலாம் —ஆச்சரியத்தையும் கொடுக்கலாம். ஆனுல் வருங்காலத் தில், இ. தே. ரா. வின் உண்மைச் சரித்திரம் எழுதப்படுகை

யில், அதில் ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமைக்காக தீரன் அக்ராம் சலியா நுழைத்த வரலாறு எழுதப்படும். அதைப்படிக்கும் நம்மவர் அவரை மானஸிகமாக ஒவ்வொரு கணமும் பூஜிப்பர் என்று நிச்சயமாகச் சொல்வேன். இ. தே. ரா. ஆரம்பத்திலிருந்து ஸ்ரீ அக்ராம் எனது உபதளபதியாக, எனக்கு உறுதுணையாக விளங்கினர். இன்று அவர் உடலம் மறைந்துவிட்ட போதிலும் அவரது தூய உள்ளமும், உயர்ந்த லக்ஷியங்களுமே எனக்கு இன்றும் வழிகாட்டிகளாக, மங்காத நக்ஷத்திரங்களாக விளங்கி வருகின்றன.

மலேயாவின் கதகதப்பான, சேறும் சகதியுமான காடுகளில் மூன்று இரவும் மூன்று பகலும் உழன்ற பிறகு எங்கள் படை வடக்கு மலேயாவில் கேதா சமஸ்தானத்தின் தலைநகரான அலோர்ஸ்டாருக்கு 20 மைல் தூரத்திலிருந்த ஒரு சிறு கிராமத்தை யடைந்தது. அங்கிருந்த ஒரு இந்திய ப்ரஜை ஜப்பானியர்கள் அலோர்ஸ்டாரை ஏற்கெனவேயே கைப்பற்றி விட்டதாக அறிவித்தார். இந் நற்செய்திகேட்ட நான் தாமதியாது ஜப்பானிய தலைமையினருக்கு உடனே ஒரு செய்தி யனுப்பினேன். அன்று பொழுது சாய்வதற்குள்ளே நம்பிக்கை யூட்டத்தக்க பதிலும் எனக்கு கிடைத்து விட்டது.

டிஸ 15உ காலை 8 மணி சுமாருக்கு ஜாப் செய்தியிலாகா தலைவர் கர்னல் ப்யூஜிவாரா (அவர் அச்சமயம் மேஜராக யிருந்தார்.) பாங்காக் நகரத்திய ஒரு சீக்கிய கனவானுடன் எங்கள் கிராமத்திற்கு வந்து சேர்ந்தார். அந்த சீக்கிய கனவான்தான் ஸ்ரீ எஸ். ப்ரிதாம் ஸிங்.

ஆமாம், இந்த ப்ரிதாம்ஸிங் யார்? எனது நாட்டினருக்கு மற்றொரு ஆச்சரிய மூட்டும் தக்கசெய்தி. இந்த ப்ரிதாம்ஸிங் தான் இந்திய சுதந்திர லீக் இயக்கத்தின் சிருஷ்டிகர்த்தா. அவர் சாதாரண ப்ரஜையானலும், இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தலை சிறந்த வீரர். பத்து வாரங்கள் இடைவிடாது நடந்த மலேயாப்போரில், போர்களத்தில் முன்னணி

யில் தங்கி நின்று தன்னந் தனியாகவே மலேயா முழுவதிலும் சஞ்சரித்து இந்திய சுதந்திர லீகின் கிளைக்காரியாலயங்களை அமைத்து திறம்பட நடத்த சலியா துழைத்தவர். '41வது டிஸம்பர் 12வ யன்று டோக்கியோ ரயில்வே ஹோட்டலில் 50 இந்தியர்களுடன்கூடி ஸ்ரீ ராஷ் பிஹாரி போஸை தலைவராகக் கொண்டு இந்திய சுதந்திரலீகை முதன்முதலாக அமைத்து இ. தே. காங்கிரஸுக்குப் பரிபூர்ண சுதந்திரத்தை பிரகடனப் படுத்தும்படியாக வேண்டுகோள் விடுத்தவர் இவர். இ. தே. ராவின் சிருஷ்டிகர்த்தாவே இவர்தான் என்றி சொல்வேன். பாங்காக் மகாநாட்டிற்காக ஏறிவந்த விமானம் வழியில் முறிந்து விழுந்ததால் ஏற்பட்ட விபத்தில் உயிர்துறக்கும்வரை இவர் இந்திய சுதந்திரலீகின் தலைவராகவும் பிரதம மூளையாகவும் விளங்கினர். இந்த விமான விபத்தில்தான் இந்தியாவின் மற்ற அருந்தவச் செயல் வீரர்களான ஸ்ரீ சத்யானந்தபூரி, காப்டன் மகமத் அக்ராம், கே. ஏ. நீலகண்ட அய்யர் ஆகியவர்களும் அகால மரணத்துக்காளாகி நம்மை பஞ்சைகளாக்கினர்.

ஸ்ரீ ப்ரிதாம் மறைந்த பின்னர் எத்தனையோபேர் தூரக்கிழக்கில் நடைபெற்ற அரசியல் நாடகத்தில் பங்கெடுத்துக் கொண்டு நடித்துவிட்டு மறைந்திருக்கிறார்கள். ஆனல் அவர்களெல்லாம் தம் முயற்சியாலோ அன்றி சந்தர்ப்ப விசேஷத்தாலோ சற்று பொறுப்புள்ள பதவிகள் கைக்கு வந்தவுடன், தங்களைப்பற்றி தாங்களே பிரமாதமாகப் பெருமைப் பட்டுக் கொண்டு சரித்திரமே தங்களால்தான் ஆரம்பிக்கிறது என்று பிரதமாதமாக நினைக்க ஆரம்பித்து விடுகிறார்கள். இந்த நினைவை ஊர்ஜிதப்படுத்தும் நோக்கத்துடன் கடந்த காலத்தை நிர்முலமாக்குவதில் சற்றும் சலியாது ஈடுபட்டு சரித்திரத்தில் தம்பெயரை இணைத்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். ஆனல், சத்தியத்துக்கே அன்றோ வெற்றி? இந்த நபர்கள் மறைந்த அடுத்தக் கணமே அவர்களது பெயர்களும்

கடந்த காலமாகிற குப்பை மேட்டுக்குத் தூக்கியெறியப் படுகிறது. ஒருவன், தான் சிருஷ்டிப்பதால்தான் வாழமுடியுமே தவிர அழிப்பதனுல் என்றுமே அவனுக்கு வாழ்வு கிடைப்பதில்லே. இந்த உண்மை ஸ்ரீ ப்ரிதாம் விஷயத்தில் நிலேத்து நிற்கும். சந்தேகமில்லே! ஸ்ரீ பிரிதாம்தான் தூரக் கிழக்கில் இந்திய சுதந்திர இயக்கத்தை சிருஷ்டித்து நடத்திஞர். பிற்காலத்தில் இந்தியாவின் அருந் தலேவர் நேத்தாஜியின் திறமை வாய்ந்த தலேமையில் சிறப்புற நடந்த இவ்விந்திய சுதந்திரப் போரின் தந்தையாக நம்மவரால் ஸ்ரீ ப்ரிதாம்ஸிங் விண்ணும், மண்ணும் உள்ள மட்டும் போற்றப் படுவர்...இனி...அந்த 15உ காலே...

அந்த 1941ஸ் டிஸம்பர் 15உ காலே நான் எனது சகபாடிகள் 54 பேரை ஒருங்கு கூட்டி ஒரு குட்டிப்பிரசங்கம் செய்தேன். அவர்களிடம் எனது சுதந்திர சேனே திட்டத்தை வெளியிட்டேன். யாவரும் இதற்குத் துணேபுரிவதாக, என்னுடன் சேர்ந்து கொள்வதாக வாக்குறுதியளித்தனர். இவ்வாலோசனே நடந்தேறிய சிறிது நேரத்திற்குள் நாங்களனேவரும் அலோர்ஸ்டாருக்கு ஒரு காரில் அழைத்துச் செல்லப் பட்டோம். இச் சமயத்தில் எனது வாழ்க்கையிலேயே முதல்தடவையாக எனரு நாட்டின் மூவர்ணக்கொடி தாங்கிய மோட்டாரில் நான் பிரயாணம் செய்யச் சந்தர்ப்பம் கிட்டியது. வண்டி பறந்த வேகத்திஞல் காற்றில் கார் நுனியில் படபடத்து வீசிய அம் மூவர்ணக் கொடியை இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு மயிர்க் கூச்சலெடுத்தது—சொல்ல முடியாத ஒரு ஆனந்தத்தால் என் உள்ளம் துள்ளிக் கூத்தாடியது—நான் புதுமனிதனுனதாக அப்போதே உணர்ந்தேன்.

கூடாரத்தினுள் நுழைந்து கர்னல் ப்யூஜிவாராவை சந்தித்தபோது அவர் இந்தியாமீது ஜப்பானியருக்கு எவ்வித ஆதிக்க ஆசையோ அன்றி பொருளாதாரச் சுரண்டல்

கொள்கையோ கிடையாதென்றும் இந்தியர்கள் தம் சுதந்தி ரத்தை யடைய எல்லா வகைகளிலும் உதவி புரியத் தாங்கள் தயாரென்றும் வற்புறுத்தித் தெள்ளத் தெளிவாகக் கூறினர்.

இந்த வாக்குறுதியைப் பெற்றதும் நான் எனது தோழர் களை வெளியிலனுப்பி "11-14 ரெஜிமெண்டின் காப்டன் மோஹன்சிங் ஜப்பானியர்களுடன் தோழமைகொண்டு, இந்திய சுதந்திரத்தைப் போரிட்டுப் பெறவேண்டி ஒருசுதந்திர சைன்யத்தை நிர்மாணித்துள்ளார். அதில் யாவரும் சேர்ந்து நமது உண்மை எதிரி பிரிட்டனை விரட்டடி யடித்து தாய் நாட்டை விடுவியுங்கள்." என்ற நற்செய்தியை எங்கணும் பரப்பச் செய்தேன். இதன் பலன் என்னவாயிற்றென்றால் அன்றுபொழுது சாய்வதற்குள் பிரிட்டிஷ் இந்திய சைன்யத் தின் பல வேறு பகுதிகளிலிருந்து பிரிந்துவந்த 200 பேர் என்கீழ் வந்துசேர்ந்தார்கள். மூன்று நாட்கள் கழிவதற்குள் சுமார் 1000 பேர் அதிகாரிகளும், சாதாரண சிப்பாய்களு முட்பட—சுதந்திர துவஜத்தின் கீழ் வந்து சேர்ந்தார்கள்! இதுவே இ. தே. ராவின் மூலபலம்! அஸ்திவாரம்! பின்னர் ஜேஹிந்த் கோஷத்துடன் இம்பால் போரிலீடுபட்ட வீரர் களின் ஆரம்பம்!

அன்று தினமே உயர்ந்த பதவியி லிருந்த ஜாப் அதிகாரி கள் பலர் என்னைக் காணவந்தார்கள். அவர்களுடன் நான் மனம் விட்டுப் பேசி பல விஷயங்களை தீவிரமாக விவாதித் தேன். அதற்கு மறுநாள் அவர்கள் என்னை 'மலேயாப் புலி' என்று பிரசித்திவாய்ந்த தளகர்த்தர் ஜெனரல் யாமஷி டோவைக் காண அழைத்துச் சென்றார்கள் அவரும் என் னுடைய திட்டங்கள் யாவற்றிற்கும் பூரண உதவி யளிப்ப தாக வாக்குறுதி யளித்தார்.

சுமார் பத்து தினங்கள் விடாமல் தொடர்ச்சியாக எனக் கும் ஜப்பானியருக்குமிடையே நீண்ட விவாதங்கள் நடை

பெற்றன. அதன் விவரத்தைச் சொல்ல இங்கு இடமில்லை, ஆயினும் அவற்றில் இங்கு குறிப்பிடத் தகுந்த பகுதிகள் சில :

ஜாப் ராணுவத்தினர் முழுக்க முழுக்க காங்கிரஸ் கொள்கைக் கெதிரா யிருந்தனர். மஹாத்மாஜியின் அஹிம்ஸைக் கொள்கையை தன் ஆயுதமாகக்கொண்டு காங்கிரஸ் போன்ற அரசியல்கட்சி தனது லக்ஷியமான சுதந்திரத்தை எவ்விதம் அடையப் போகிறது என்று அவர்கள் ஆச்சரியப் பட்டார்கள். இதை நான் அவர்களுக்குப் புரியவைத்தேன். காங்கிரஸ் கைபிடித்துள்ள அஹிம்ஸா மார்க்கமே இந்தியா சுதந்திரமடைவதற்கு சரியான வழியென அவர்களுக்கு விளக்கினேன்.

பிரிட்டிஷாரை இந்தியாவினின்று விரட்டும் வரையில் காங்கிரஸ் வாளா விருக்கா தெனவும் கூறினேன். காங்கிரஸின் தெளிவான சம்மதமின்றி ஜப்பானியர் பிரிட்டிஷாரை இந்தியாவினின்று விரட்டவேண்டி எவ்விதமான ராணுவ நடவடிக்கையையும் இந்திய எல்லையினுள் எடுக்கலாகாதென்றும் எச்சரிக்கை செய்தேன் பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் பன்னெடுங் காலமாக வேர்விட்டிருப்பதால் அங்கிருக்கிறவரை தோற்கடிக்க முடியாதவர்களாய் அவர்கள் விளங்குவர்களாயினும், இந்திய மக்களது முன் சம்மதமின்றி ஜப்பானியர் பிரிட்டிஷார்மீது ஏதாவது ராணுவ நடவடிக்கை இந்தியாவில எடுத்தால் மக்கள் கொதித் தெழுவார்களாதலால் தங்களது லக்ஷியத்திற்கே ஹானி யேற்படு மென்பதையும், ராஜதந்திரத்தில் கைதேர்ந்தவர்களான பிரிட்டிஷார் இக் கொதிப்பை தங்கள் சுய நன்மைக்கே உபயோகித்துக் கொள்வார் களென்பதையும் நான் அறிவுறுத்திச் சொன்னேன். அப்போது இந்தியா இரண்டாவது சைனாவாக உருவெடுத்துவிடும் என்றேன். ஆகவே பிரிட்டிஷாரை இந்திய மண்ணில் முறியடிக்கக்கூடிய வர்கள் இந்தியர்களே என்பதையும் இந்தக் காரணத்

திற்காகவே ஜப்பானியர்கள் தற்போது செய்யக்கூடிய சிறந்த காரியம்—அவர்கள் தம் லக்ஷியத்தை சுலபத்தில் அடையக் கூடிய மார்க்கம் இந்தியர்களடங்கிய ஒரு சுதந்திரச் சேனையை சிருஷ்டித்து அதற்குத் தேவையான உதவிகள் யாவற்றையும் செய்வதே என்பதையும் விவரமாக எடுத்துச் சொன்னேன்.

இத்துடன் எனது பேச்சுக்களின் ஆரம்பத்திலேயே ஜாப் ராணுவத் தலைமையினருடன் மற்றொரு விஷயத்தையும் வற்புறுத்திச் சொன்னேன். அதாவது, அச்சமயம் பெர்லினில் இருந்து வந்த ஸ்ரீ சுபாஷ்போஸை தூரக்கிழக்குக்கு அழைத்து வந்து இந்த சுதந்திர சைன்யத்தையும், சுதந்திர திட்டத்தையும் அவரிடம் ஒப்படைத்தல் மிக மிக அவசியமென்று நான் அவர்களிடம் வற்புறுத்திக் கூறினேன். ஆனால் அவர்கள் இதற்கு இம்மியும் இணங்கவில்லை. அதற்கு அவர்கள் எடுத்துக்கூறிய காரணங்களை இங்கு கூறுவது அநாவசியம். நான் இந்த விஷயம்பற்றி அநேகந்தடவைகள், சந்தர்ப்பம் வாய்த்த போதெல்லாம் அவர்களிடம் வற்புறுத்தி வந்தேன் இவ்வற்புறுத்தலும் அதன் பலாபலன்களும்—அதுவேறு கதை. அதை மற்றொரு சமயம் கவனிப்போம்......

முடிவே காணமுடியாது போலத் தோன்றிய நீண்ட விவாதங்களும் ஒருவழியாக முடிவை எட்டிப் பிடித்தன. ஜாப் அதிகாரிகளும் எனக்கு பூரண உதவி யளிக்கச் சம்மதித்தார்கள். அவர்கள் கைதுசெய்திருந்த இந்திய யுத்தக்கைதிகளனைவரும் என்வசம் ஒப்புவிக்கப் படுவரென்றும், அவர்களுள் என் திட்டத்திற்கு சம்மதிப்பவர்களையு முட்கொண்டு இந்திய தேசிய ராணுவத்தை நான் அமைக்க வேணுமென்றும், இந்தியரது உயிரும், உடைமையும் ஜப்பானியர்களால் மதித்துக் காப்பாற்றப் படுமென்றும் வாக்குறுதி பெற்றுக் கொண்டேன். ஜெனரல் யாமஷிடா இந்த விவரங்களடங்

கிய ஒரு விசேஷ உத்தரவை 1941ஆம் டிஸம்பர்மீ பிறப்பித்தார்.

இதே டிஸம்பர்மீ 26உ யன்றுதான் டோக்கியோவில் இந்திய சுதந்திர இயக்கத்தின் தந்தையான ஸ்ரீ ப்ரிதாம்சிங் தமது சுதந்திரக் கொள்கைத் திட்டத்தை ஆரம்பித்தது. அன்றுதினம் அவர் டோக்கியோ ரெயில்வே ஹோட்டலில் ஐம்பது இந்தியர்களைக் கூட்டி இந்திய சுதந்திர லீகை சிருஷ்டித்தார். இக் கூட்டத்திற்குத் தலைவராக ஸ்ரீ ராஷ்பிஹாரி போஸை அவர் நியமித்தார். இந்த ஸ்ரீ போஸ் 1912ம் ஆண்டில் வைஸ்ராய் ஹார்டிஞ்சை தாக்க முயன்றதற்காக கைது செய்யப்பட்டுத் தப்பி ஜப்பானுக்கு வந்து தங்கிவிட்டவர். முப்பது ஆண்டுகளாக ஜப்பானிலேயே இருந்து அவர்களது வாழ்க்கையோடு ஒன்றிப்போனதால் அவர்களிடம் அபார வாஞ்சையும் நம்பிக்கையும் கொண்டுவிட்ட அவர் ஒரு ஜப்பானியப் பெண்ணை மணந்துக் கொண்டார். பிள்ளைகளும் உண்டு. 1941 டிஸம்பர் 26உ கூடிய இக்கூட்டம்தான் இந்திய சுதந்திர பிரகடனத்தை வெளியிடும் படியாக காங்கிரஸைக் கேட்டுக்கொண்டது. இதுதான் இந்திய சுதந்திர இயக்கத்தின் முதல் கூட்டம். நிற்க,

யாமஷிடோ அறிக்கை வெளியிட்டதைத் தொடர்ந்து என் திட்டத்திற்கு உடனேயே அதிசயத்தக்கதுந்தமாப் பிரமாதமான வெற்றி கிட்டியது. சிங்கப்பூர் விழுவதற்குள்ளாக எனது தலைமையின்கீழ் மொத்தம் சுமார் 10000 பேர்களைக்கொண்ட—இவர்க ளனைவரும் தாய்நாட்டு விடுதலைக்காக சுயமாகவே தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள்—பத்து தளங்களை அமைத்துக் கொண்டுவிட்டேன். 1942ஆம் பிப்ரவரி 17 ந் தேதி வாக்கில் என்வசம் 45000 வீரர்கள் இருந்தனர் என்பதை இங்கு குறிப்பிடுவது அவசியம்.

டோக்கியோவில் இந்திய சுதந்திரலீகை ஸ்தாபித்த

பிறகு ஸ்ரீ ப்ரிதாம்சிங் மேற்கொண்டு தம் வேலையி லீடுபட்டார். '42ஆம் ஜனவரி 16உ யன்று குலாலம்பூரில் ஒரு கிளையைத் திறக்க ஏற்பாடு செய்தார். இந்த வைபவத்துக்கு கர்னல் ப்யூஜியாமா, மேஜர் ப்யூஜிவாரா ஆகிய இருவரும் ஜாப் அதிகாரத்வத்தின் பிரதிநிதிகளாக வந்திருநதனர். அப்போது ஸ்ரீ ப்ரிதாம் பேசுகையில் ஜப்பானியர்களின் சமய சஞ்சீவியான உதவியினால் தமது இயக்கத்திட்டம் உருவானதுபற்றி விரிவாகப்பேசி ஜப்பானியர்களுக்கு தமது நன்றியையும் தெரிவித்துக் கொண்டார். இவ்வுரைக்கு பதிலளிக்கும் ரீதியாக கர்னல் ப்யூஜியாமா பேசினதை ஆங்கிலத்தில் ஸ்ரீ ஒட்டகூராவும், தமிழில் (பம்பாய் லைப் இன்ஷ்யூரென்ஸ் கம்பெனியின் மலேயாக் கிளையின் ஸெக்ரிடரியான) ஸ்ரீ கே. ஏ. நீலகண்ட அய்யரும் மொழி பெயர்த்துச் சொன்னார்கள்.

அவரைத் தொடர்ந்து மேஜர் ப்யூஜிவாராவும் தூரக்கிழக்கு மஹா யுத்தத்தின் முக்யத்வத்தைப் பற்றியும் அதன் லக்ஷியங்களைப் பற்றியும் விரிவாகப் பேசினார். அத்துடன் தாம் தமது இந்திய நண்பர்களிடமிருந்து பூரண ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். அதன்பிறகு ஆங்காங்கு பல கிளைகள் திறக்கப்பட்டு ஆட்கள் சேர்க்கப்பட்டார்கள்.

இந் நிலையில்தான் பாங்காக் மஹாநாடு கூடியது. அக்கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்களைப் பற்றிய தம் அபிப்ராயத்தை தெரிவிக்குமாறு நான் ஜாப் தலைமையினரைக் கேட்டேன். அவர்கள் காலங் கடத்திவர ஆரம்பித்தனர். இது எனக்கு சற்றும் பிடிக்கவில்லை. எனது சுதந்திர திட்டத்திற்கு தகுந்த வளர்ச்சியில்லை எனக்கண்டேன். ஜப்பானியர் எங்களுடன் தொடர்புகொள்ள ஏற்படுத்தியிருந்த இவாகுரோ கிகான் என்ற ஸ்தாபனம் எங்களுக்கு ஒவ்வொரு படியிலும் முட்டுக்கட்டை யிட்டு வந்ததை, நாளாவட்டத்தில் நான்

172707

அறிய ஆரம்பித்தேன். இந்த மோசமான நிலைமையை சீர்திருத்த நான் தலைவர் ராஷ்பிஹாரி போஸை வற்புறுத்தினேன். ஆனால் முன்பே தெரிவித்திருந்தபடி அவர் ஜப்பானியர்களது நல்லெண்ணத்தில் அபார நம்பிக்கை வைத்திருந்தார். ஆகவே அவர் அவர்களை அவசரப்படுத்த விரும்பவில்லை.

இதனால் விவாதம் முற்றியது. பாங்காக் மகாநாடு முடிந்த சிறிது நாட்களில் ஆரம்பித்த இவ்விவாதம் ’42ஆம் முடிவு வரை இழுத்துக்கொண்டு வெகு வேகமாக முன்னேறி ஒரு சிகரத்தை எட்டியது. நான் எனது நிலைமையை விளக்கி வெளியிட்ட அறிக்கையில், எனது தலைமையை ராஜிநாமா செய்த அதேக்ஷணத்தில் எனது லக்ஷியம் சிதைவுறாதிருக்கவேண்டி, அலோர்ஸ்டாரில் சிருஷ்டிக்கப்பட்ட இ. தே. ராவையும் இவ்வறிக்கைமூலம் கலைத்துவிட்டதாகத் தெரிவித்தேன். இப்புரட்சி நடவடிக்கையை ஏற்றுக்கொள்ளாத ஜப்பானியர்கள் உடனே கைது செய்தார்கள். பிறகு யுத்த நிலைமை மாறிற்று ஜப்பான் வீழ்ந்தது. நானும் தாய்நாட்டிற்குத் திரும்பினேன், செங்கோட்டை கைதியாக. ஆனால் விடுதலையுமுண்டு லக்ஷியவெற்றியு முண்டு!......

முடிவாக எனது தேசமக்களுக்கோர் நற்செய்தி: இ. தே. ரா முழுக்க முழுக்க சுயமாகச் சேர்ந்தவர்களது சைன்யமே. அதன் லக்ஷியம் இந்தியாவின் சுதந்திரத்தைத் தேடித் தருவது. இந்த ராணுவத்தில் நானாவிதஜாதி, வகுப்பு மக்களும் பங்கெடுத்துக் கொண்டன. இதில் முக்கியமாக பெருவாரியாகப் பங்கெடுத்துக் கொண்டவர்கள் வீரதீரத்துக்கு அழியாப் புகழ்பெற்ற கூர்க்கர்கள். இவர்கள்தான் முதன் முதலில் என்னுடன் சேர்ந்தவர். எங்கள் ராணுவம் அமைக்கப்பட்ட ஒருவாரத்திற் குள்ளாகவே எல்லாவிதமான ஜாதி மத வேறுபாடுகளும் எங்களைவிட்டு அறவே யொழிந்தது.

எங்கும் அன்பும் அமைதியும் குடிகொண்டது, எங்களுக்கெல்லாம் ஒரே சமையலறை. "நாம் முதலில் இந்தியர். கடைசியிலும் இந்தியரே. நாம் யாவரும் ஓர் தாய் வயிற்றுச் சோதரர்" என்ற நினைவே எங்களிடை மேலோங்கி யிருந்து. நான் இ. தே. ராவுக்கு தலைமைவகித்த 13 மாதங்களில் ஒரு மதச்சண்டையாவது, பூசலாவது எங்களிடை நேரவேயில்லை. இந்த என் அனுபவத்திலிருந்து அந்நிய ஆதிக்கம் நம்மிடையிலின்றும் ஒழியுமட்டும் நம்நாட்டில் மதத்தைப்பற்றிய சமரஸ மனப்பான்மை நிலவவே நிலவாது என்று நிச்சயமாகச் சொல்லுவேன். இந்தியா வெங்கணும் பகைமையையும் வேற்றுமையையும் பரப்பிவரும் விஷப்பாம்பு இந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்யமே! இந்தக் கொடும்பாம்பின் தலையை நசுக்கிப் பிளக்காதவரையில் இந்தியாவுக்கு ஒற்றுமை என்பதே கிட்டாது. அதைச்செய்யவேண்டியது நம் கடமை, நாமும் செய்தே முடிப்போம். இதில் சந்தேகமே வேண்டாம்!

ஜே ஹிந்த்!

வந்தேமாதரம்!

அடுத்தது! தயார்!

வீரத் காங்கிரஸ்

நேரு, கிருபளானி தலைமை யுரைகளுடன

விலை அணு 8.

172707

நாற்பது ஆண்டுகளாய் இந்தியா, சிலோன் மற்றும் ஜலப்பிரதேச நாடுகள் எங்கும் பிரசித்தி பெற்று வருவதும், மாக்ஷிமை தங்கிய கவர்ன்மெண்டாரால் "பீடி சக்கரவர்த்தி" என்ற பட்டமும் தங்கமெடல்களும் பரிசாகப்பெற்ற எமது

த. பி. சொக்கலால்

ராம்சேட் பீடி

அது தரும் சுகமும், மணமும் எல்லோராலும் புகழப்பட்டு வருகிறது; ஆதலால், சுத்த சுதேசிப் பொருளாகிய எங்கள்

சொக்கலால் ராம்சேட் பீடியை

சதாவும் உபயோகித்து ஆனந்திக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

த. பி. சொக்கலால் ராம்சேட் தொழிற்சாலை,

முக்கூடல் (திருநெல்வேலி ஜில்லா)

மதராஸ் ஏஜண்டு:—A. காதர் அலி,

68, மலையப்பெருமாள் தெரு, ஜி. டி. மதராஸ்.

அம்பால் ஆயிண்ட்மெண்ட்



அசாத் பற்பொடி

ஸோல் ஏஜண்டு:

A. காதர் அலி

68, மலையப் பெருமாள் தெரு, ஜி. டி. மாதராஸ் சென்னை.

Tagore Press, Washermanpet Madras. M.S. 363 C 1000 1-1-47